தமிழர்

திருமண முறைகள்

(வைணவம்)

ஆசிரியர் :

அ. கு. பாலசுந்தரனார், பி. ஏ. எல். டி.,

ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

தனலட்சுமி பதிப்பகம்

சென்னை

1949

விலை அணா [illegible]

தமிழர்

திருமண முறைகள்

(வைணவம்)

ஆக்கியோர் :

அ. கு. பாலசுந்தரனார், பி. ஏ, எஸ். டி.,

ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

தனலட்சுமி பதிப்பகம்

சென்னை

1949

விலை அணா 8

முன்னுரை

தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி தோன்றிவிட்டது. தமிழ்மொழிப் பற்றும் 'தமிழர்' என்ற இனப்பற்றும் எல்லாத் தமிழரிடையிலும் வீறிட்டு எழுந்து நிற்கிறது. தேசியவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர் கூடத், தங்கள் வீடுகளில் நடக்கும் சுபாசுப காரியங்களைப் பார்ப்பனப் புரோகிதரைக் கொண்டு நடத்த விரும்பாத அளவுக்கு இன உணர்ச்சி பெற்றுவிட்டனர்; பார்ப்பனருக்குப் பதிலாகத் தங்கள் குடும்பம், இனம் அல்லது கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியவரைக் கொண்டே சடங்குகளை நடத்திக் கொள்கிறார்கள். அப்பெரியோர்களுக்கு இந்நூல் மிக உதவியாக இருக்குமென்று நம்புகிறோம். அவர்கள் படிக்கத் தெரியாதவரா யிருந்த போதிலும், படித்தவர் ஒருவரைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு சடங்குகளை நடத்தலாம்.

பார்ப்பனப் புரோகிதர்களை விலக்கிய பல குடும்பங்களில் பழமை, பழக்கம் காரணமாக, அவர்கள் செய்வது போலவே திருமணம் நடத்தப்படவேண்டுமென்று விரும்புகிறார்கள். பார்ப்பனர்கள் செய்வது 'பிரம்ம விவாகம்' எனப்படும். இந்து சட்டத்தின்படி அம்மாதிரியான விவாகத்தில் மணப் பெண்ணின் பெற்றோர் அவளை மணமகனுக்குத் தானம் செய்வதும் (கன்னிகா தானம்), பிறகு மணமகன் அப்பெண்ணுக்குத் தாலி கட்டிவிட்டு, அவளது கையைப் பிடித்துக் கொண்டு அக்கினியைச் சுற்றி 7 அடி எடுத்து வைப்பதுமே (சப்த பதி) முக்கியமான சடங்குகள் ஆகும். ஆனால் அம்மாதிரியான திருமணத்தில் நம் நாட்டுக்கும், நம் கொள்கைகளுக்கும், பகுத்தறிவுக்கும், தன்மானத்துக்கும் பிடித்த மில்லாத பல சடங்குகள் அனாவசியமாக, பார்ப்பனப் புரோகிதருக்கு அரிசியும் பணமும் மற்றபொருள்களும் கிடைப்பதற்காக செய்யப்படுகின்றன. உதாரணமாக மணவினையின் தொடக்கத்தில் மணமகன் பரதேசம் போவதும், நிறைகுடப் பூசையும் ஏமாற்று வித்தைகள் ஆகும்

பிள்ளையார் பூசை, நவக்கிரக பூசை ஆதியவை, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உயரிய கொள்கையையுடைய தமிழர்க்கு முரணான செயல்கள். ஆவினில் ஐந்தின் (பஞ்ச கௌவியம்) பூசை, தானிய முளை வளர்ந்த பாலிகைகளின் பூசை ஆகியவை நமது பகுத்தறிவுக்கு முரண்பட்டவை. இம்மாதிரியான மற்ற முற்போக்கடைந்த மக்கள் முன்னிலையில் நமக்கு இழிவைத் தரும் சடங்குகளை நீக்கி, மதப்பற்றுடையவர்களுக்கிடையே பழக்கத்தில் இருந்து வரும் திருத்துழாய் அளித்தல், திருமந்திரம் ஓதுவித்தல் முதலிய புதுச் சடங்குகளை நுழைத்திருக்கிறோம்.

என்றாலும் சில குடும்பங்களில் உள்ள பெண்கள் பகல் நேரத்தில் நடக்கும் திருமணத்தில் தாலி கட்டும்போது, ஆலம் கரைத்த தட்டில் காமாட்சியம்மன் விளக்கை ஏற்றிவைத்துக் காட்டுதல் போன்ற பகுத்தறிவுக்குச் சிறிதும் ஒவ்வாத சில செயல்களை அறியாமையால் மிக அவசியமானவை என்று கருதுகிறார்கள். அப்பேர்ப்பட்ட தாய்மார்களின் மனம் கவலை அடையாமலிருக்க அச் செயல்கள் நடைபெறும் சமயங்களை ஆங்காங்கே குறித்திருக்கிறோம்.

எல்லாத் தமிழர்களும் தங்களுக்கு அவசியம் என்று தோன்றும் சடங்குகளைச் செய்யவும், அவசியம் அல்லவென்று தோன்றும் சடங்குகளை விலக்கவும் ஆன உரிமைகளை அவர்களுக்கே கொடுத்துவிட்டு, தமிழருடைய தன்மானத்துக்குக் கேடு விளைவிக்காத எல்லாச் சடங்குகளையும் இந்நூலில் விவரித்திருக்கிறோம்.

மேலும் இம்மாதிரியான திருமணம் நடைபெற உதவியாயிருக்கக்கூடிய பொருள்களின் விவரங்களையும், மாதிரித் திருமண அழைப்பு, அறவுரைகள் முதலியவைகளையும் இந்நூலின் இறுதியில் திரட்டிக் கொடுத்துள்ளோம்.

முற்போக்கான தமிழர்களிடையே நடைபெறும் கோயில் திருமணம், சுயமரியாதைத் திருமணம் ஆகியவைகளை நடத்தும் முறைகளையும் விவரித்துள்ளோம். மற்றும் தமிழர் குடும்பங்களில் நடக்கும், குழந்தையைத் தொட்டிலில் இடல், காது குத்தல்,

பள்ளிக்கு அனுப்புதல், ருதுசாந்தி முகூர்த்தம், நிச்சயார்த்தம், சாந்திமுகூர்த்தம், மருவிலக்கம், சீமந்தம் முதலிய பல சடங்குகளை நடத்தும் முறைகளையும் இந்நூலில் விவரித்துக் காட்டியுள்ளோம். ஆகவே எல்லாத் தமிழர்களும் எவ்வித சடங்குகளையும் தங்கள் உறவின்முறையோ நண்பர்களையோ கொண்டு நடத்திக்கொண்டு தன்மானமுள்ளவராய் வாழ இந்நூல் அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

திருவல்லிக்கேணி,
17—8—1949

அ. கு. பாலசுந்தரன்.

உள்ளுறை

தமிழர் திருமண முறை

(வைணவம்)

பழைய காலத்தில் நமது முன்னோர்கள் அரசமரத்தடியில் போடப்பட்ட மேடையின்மேல், யாதொரு பந்தரும் இல்லாமல், திருமணங்களை நடத்திவந்தார்கள். வெளியான இடங்களில் நடத்தும்போது மழையினால் தொந்தரவு இருக்கக் கூடாது என்பதற்காகவே, வெய்யல் காலமாகிய சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, தை மாதங்களில் திருமணங்களைச் செய்வது என்ற வழக்கத்தை மேற்கொண்டார்கள். அம் மாதிரியாக நடத்தப்படும் திருமணம் இயற்கையோடு இயைந்த மணம் ஆகும்.

பட்டப் பகலில் மணவறையில் குத்துவிளக்கு, குடவிளக்கு, கிளை விளக்கு முதலிய பலவிளக்குகளை ஏற்றிவைக்கும் ஆபாசத்தை அங்கே காணமுடியாது. ஏனெனில் காற்றில் அவ்விளக்குகள் நின்று எரிய முடியாமல் அவிந்து போகும். மேலும் திருமணத்தைக்காண வந்திருப்பவர்களை ஒரு வீட்டுக்குள்ளே அடைத்து, காற்றில்லாமையாலும் புகையாலும் அவர்களைப் புழுங்கச் செய்வதும் அங்கே இராது. மர நிழலில் காற்று வாட்டத்தில் உட்கார்ந்து திருமண நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அம் மாதிரியாக இயற்கை வழி நின்று திருமணங்களை நடத்திக்கொள்ள தமிழர் என்று தான் முன் வருவார்களோ ?

அரசணி கால்

ஆனல் இக்காலத்தில் வீட்டிற்குள்ளே வாசலில் பந்தரைப்போட்டு, முத்தாலும் பூக்களாலும் அலங்கரித்து, அதன் கால்களில் வாழைமரங்களைக் கட்டி, அம் மண

வறையில் மணமக்களை இருத்தி திருமணத்தை நடத்துகிறார்கள். இருந்தாலும் முன்னோர்களின் வழக்கத்தைக் கையாளுவதாகக் காட்டிக்கொள்ள, அம் முத்துப்பந்தரின் நடுவில் கிழக்குப் பக்கத்தில் இலைகளுடன் கூடிய அரச மரத்துக் கிளை ஒன்றை 3 சுமங்கலிகளைக் கொண்டு நாட்டி, மஞ்சள் பூசி, குங்குமப் பொட்டு இட்டு, பூ மாலை சூட்டித் தீபாராதனை செய்து, அரசமரத்தின்கீழ் திருமணம் செய்வதுபோல பாவிக்கிறார்கள். இதற்கு அரசணி கால் என்று பெயர்.

அரசமரத்தின் கிளை பட்டணங்களில் சுலபமாகக் கிடைக்காது ஆகையால், ஒரு பச்சை மூங்கிலின் முனையில் மாவிலைக் கொத்து ஒன்றைக் கட்டி, நாட்டிவிட்டு, அதையே அரசமரமாகப் பாவிக்கிறார்கள்.

பார்ப்பனப் புரோகிதரைக் கொண்டு செய்யப்படும் திருமணத்தில், பெரிய கைகுட்டை அளவுள்ள புத்தாடை ஒன்றை அரசணி காலுக்கு உடுத்துவதும், அதற்கு மஞ்சள் கயிற்றினால் காப்புக் கட்டுவதும் உண்டு. திருமண நிகழ்ச்சிகள் முடிவு பெற்றதும், புரோகிதர் அத் துண்டை அவிழ்த்து எடுத்துக் கொள்வார். அரசணி கால் நடுவது என்ற இந்த ஏமாற்று வித்தையைத் தமிழர்கள் கைவிட வேண்டும்.

வீட்டுக்குள்ளே பந்தர் போட்டுத் திருமணம் நடத்துவோரும் சிக்கனத்தை மேற்கொண்டு, அப்பந்தருக்கு முத்து அலங்காரம், புஷ்ப அலங்காரம் ஆகியவைகளைச் செய்யாமல், மாவிலை, அசோகிலை, தென்னை ஓலைத்தொங்கல் ஆகியவைகளின் தோரணங்களைப் பந்தரைச் சுற்றிக் கட்டினால் போதும்.

கல்யாண வீட்டுக்குமுன்னே பந்தல் போட்டு அலங்கரிப்பதும் அவசியமான தல்ல. முன்னேற்றம் அடைந்துள்ளவர்களில் பெரும்பாலோர், தங்கள் வீட்டு வாயிலில் 2 வாழைமரங்களை நாட்டி, அவற்றிற் கிடையே ஒரு மாவிலைத் தோரணத்தைக் கட்டிவிட்டு, வீட்டுக்குள்ளே

கல்யாணம் செய்வதை நாம் பார்ப்பதில்லையா? அதே மாதிரி யான சிக்கன முறையை நாமும் ஏன் கையாளக் கூடாது?

இனி கன்னிகா தானம் என்ற மணமுறையை விவரிப் போம் :

1. இறை வணக்கம்

மண ஆசிரியர் வடக்கு நோக்கி உட்காரவேண்டும். உடனே இந் நூலின் இறுதியில் 'மணவினைக்கு வேண்டிய பொருள்கள் என்ற தலைப்பின்கீழ்க் குறிக்கப்பட்டுள்ள வைகளை யெல்லாம் தன்னருகில் வாங்கி வைத்துக் கொண்டு, பின் ஆசிரியர்

குடதிசை முடியை வைத்துக் குணதிசைப் பாதம் நீட்டி
வடதிசைப் பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலு மாகண்டு
உடல் எனக்கு உருகுமாலோ என் செய்கேன் உலகத்தீரே!

—தொண்டரடிப்பொடியார்

என்ற பாடலைப் பாடி இறை வணக்கம் செய்யவேண்டும்.

2. மண ஆடை வாழ்த்திக் கொடுத்தல்

ஒரு பெரிய தட்டில் மணமகனுக்குக் கூறைவேஷ்டி, 2 மாலைகளும், மணமகளுக்கு கூறைச் சேலை, 2 மாலைகளும் வைத்து, ஆசிரியர் முன்னே ஒரு முக்காலியின் மேல் வைக்க வேண்டும். வாழ்த்துவதற்காக உதிரிப் பூக்கள் நிறைந்த இன்னொரு தட்டும் ஆசிரியர் முன் வைக்கப்படவேண்டும். உடனே ஆசிரியர்,

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பல்கோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக் காப்பு.

—பெரியாழ்வார்

என்ற பாடலைப் பாடிக் கொண்டே உதிரிப் பூக்களை கூறை வேஷ்டி சேலைகளின்மீது கொஞ்சங் கொஞ்சமாகச் சொரிந்து

வாழ்த்த வேண்டும். பின்பு தோழிப் பிள்ளையை அழைத்து அவரிடம் அந்தத் தட்டைக் கொடுத்து, மணமகனுக்குச் சேரவேண்டிய கூறைவேஷ்டி மாலைகளை எடுத்துக்கொண்டு, மிகுதியை தோழிப் பெண் மூலம் மணமகளுக்குச் சேர்த்து விடும்படிச் சொல்ல வேண்டும்.

3. மணமக்கள் மணவறை புகுதல்

கூறைவேஷ்டி சேலைகளையும் பூ மாலைகளையும் அணிந்து கொண்டு மணமக்கள் தனித் தனியாக தோழிப்பிள்ளை, தோழிப்பெண்ணுடன் வலமாக வந்து மணவறையில், ஆசிரியர்க்கு இடதுகைப் பக்கத்தில், கிழக்கு நோக்கி, அவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நீண்ட மணையில், மணமகனுக்கு வலப்பக்கத்தில் மணமகள் இருக்கும்படி உட்காரவேண்டும்.

சில குடும்பங்களில் மணப்பந்தரின் கிழக்குப் பக்கத்தில் அரசணி காலுக்குப் பின்னால் 3 இலைகளில் மணப் பொங்கல், பழம், வெற்றிலைப் பாக்கு ஆகியவைகளை வைத்து, மணமக்கள் புறப்பட்டுவரும் போது அவைகளுக்குத் தேங்காய் உடைத்து, தூபம் போட்டு, தீபாராதனை செய்ய வைப்பதும் உண்டு.

4. திருத்துழாய் அளித்தல்

மணவினைத் தொடக்கத்தில் பார்ப்பனப் புரோகிதர் இயற்றும் பிள்ளையார் பூஜை 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற கோட்பாடுடைய தமிழருக்குப் பொருந்தாதென்றும், நவக்கிரக பூஜை 'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' என்ற கொள்கையினையுடைய தமிழருக்கு ஆகாதெனவும், மற்றும் ஆவினில் ஐந்து, நிறை குடம், தான்ய மூளை வளர்த்த பாலிகைகள் ஆகியவைகளின் வழிபாடும், மணமகன் பூணூல் அணிவதும், பரதேசம் போவதும், இக்காலத்துத் தமிழரின் பகுத்தறிவுக்குப் பொருந்தாதனவென்றும் விடுத்தனம்.

அவைகளுக்குப் பதிலாக, வைணவர்களுக்கு இன்றி யமையாதனவான திருத்துழாய், திருநாமம் ஆகியவற்றின் சிறப்புக்களை இல்லற வாழ்க்கையைத் தொடங்கப்போகும் மணமக்களுக்கு எடுத்துக்காட்டும் சடங்குகளை இங்கு நுழைத்திருக்கிறோம்.

மண ஆசிரியர் திருத்துழாயை ஒரு தட்டில் வைத்து, அதில் கொஞ்சம் விரல்களினிடையே எடுத்துக் கொண்டு,

வாராயின முலையாள் இவள் வானோர் தலைமகனும்
சீராயின தெய்வ நன்னோய்இது தெய்வத் தண்ணந்துழாய்
தாராயினும் தழையாயினும் தண்கொம்ப தாயினும் கீழ்
வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே !

—நம்மாழ்வார்

என்ற பாட்டைப் பாடிப் பின் மணமகனுக்கும் மணமகளுக்கும் திருத்துழாயைக் கொடுத்து அணிந்துகொள்ளச் சொல்லவும்.

5. திருமந்திரம் ஓதுவித்தல்

வைணவர்கள் நாராயணனுடைய பெருமையையும், அவனது திருநாமத்தைப் பன்முறை சொல்வதனால் உண்டாகும் பயன் இன்னதென்பதையும் அறிய வேண்டியவராதலின், ஆசிரியர்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
　　படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
　　அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
　　தாயினும் ஆவன செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
　　நாராயணா என்னும் நாமம் !

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
　　மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன்மாலை
　　இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்

துஞ்சும்போது அழைமின்! துயர்வரில் நினைமின்!
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம்! —திருமங்கை ஆழ்வார்

என்ற பாடல்களை ஓதி, மணமக்களை 'நாராயணா' என்று மும்முறை சொல்லும்படிச் செய்யவேண்டும்.

6. காப்புக் கட்டுதல்

இது ஓர் அனுவசியமான சடங்கு. இருந்தபோதிலும் இக்காலத்தில் நடைபெறும் திருமணங்களில் காப்புக் கட்டலும், காப்பு அவிழ்த்தலும் முக்கியமான சடங்குகளாகக் கருதப்படுகின்றன. காப்பு அவிழ்த்தலுக்காகவே (கங்கண விசர்ஜனம்) திருமண காலத்தில் தனியாக ஒருநாள் ஒதுக்கி வைக்கப்படுகிறது. அச் சடங்கு நடைபெறும் காலத்தையும் திருமண அழைப்புக்களில் குறிக்கிறார்கள். இதை அவசியம் செய்யவேண்டும் என்று கருதும் தமிழர்களுக்காக ஒரு சுருக்கமான முறையை இங்கே விவரிக்கிறோம்.

ஆசிரியர் முன்னே முக்காலியின்மேல் உள்ள தட்டில் மஞ்சள் பூசி குங்குமப் பொட்டிட்ட ஒரு தேங்காய் வைக்கப்படவேண்டும். சிறு மஞ்சள் கொம்பு கட்டிய மஞ்சள் பூசின கயிறுகள் இரண்டு அந்தத் தேங்காயைச் சுற்றி வைக்கப்படவேண்டும். உடனே ஆசிரியர்

என்றும் மறந்தறியேன் என்னெஞ்சத்தே வைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை - என்றும்
திருவிருந்த மார்பன் சிரீதரனுக் காளாய்
கருவிருந்த நாள்முதலாக் காப்பு.

என்ற பாடலைப் பாடி முடித்தவுடன், மேளம் கொட்டச் சொல்லிவிட்டுக், அக்கயிறுகளில் ஒன்றை எடுத்து மண

மகனின் வலக்கையில் கட்டிவிட்டு, மற்றொன்றைத் தோழிப் பெண்ணின் கையில் கொடுத்து, மணமகளின் கையில் கட்டச் சொல்லவேண்டும்.

7. பெற்றோர் வழிபாடு

(பாத பூசை)

' அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் '

—கொன்றை வேந்தன்

என்ற ஆன்றோர் வாக்கின்படி தாயும் தகப்பனும் கண்கண்ட தெய்வங்கள் ஆவார்கள். ஆகவே மணவாழ்க்கையைத் தொடங்கவிருக்கும் மணமக்கள் இவ் வழிபாட்டை அவசியம் செய்யவேண்டும். எனவே இது எல்லாத் தமிழர்கட்கும் சம்மதமான சடங்கு ஆகும்.

முதலில் மணமகனின் தாய்-தந்தையரை (அவர்களிருவரும் உயிரோடில்லா விட்டால், பெரியப்பன்-பெரியன்னை, சிற்றப்பன்-சிற்றன்னை, மாமன்—மாமி, அண்ணன் - அண்ணி ஆகியவர்களை) மணவறைக்கு வந்து மணமகனுக்கு எதிரில் நிற்கும்படிச் செய்யவேண்டும். மணமகன் தன் பெற்றோரின் பாதங்களைச் சிறிது நீர் தெளித்துக் கழுவி, தகப்பன் பாதங்களுக்குச் சந்தனம் பூசி, திருமண் இட்டுத், தாயின் பாதங்களுக்கு மஞ்சள் பூசிக், குங்குமம் இட்டுப் பின் பூவும் சந்தனமும் பன்னீரும் தெளித்துக் கைகூப்பித் தொழ வேண்டும். அவ் வழிபாட்டின் போது ஆசிரியர்,

என்னப்பன் எனக்காய் இகுளாய் என்னைப் பெற்றவளாய்
பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பன் என்அப்பனுமாய்
மின்னப்பொன் மதிள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்த அப்பன்
தன்ஒப்பார் இல்அப்பன் தந்தனன் தனதாள் நிழலே.

—நம்மாழ்வார்

என்ற பாட்டைப் பாட, மணமக்களிருவரும் தாய் தந்தையரை அம்மையப்பனுகிய இறைவனைப் போலப் பாவித்து வணங்கவேண்டும். அப்போது ஆசிரியர் அவர்களிடம் சில உதிரிப் பூக்களைக் கொடுத்து, மணமக்களை வாழ்த்தும்படிச் சொல்லவேண்டும்.

பிறகு அப்பெற்றேர்களைப் போகச் சொல்லிவிட்டு, மணமகளின் தாய் தந்தையரை வருவித்து, முன்மாதிரியே அவர்களுடைய பாதங்களுக்கும் மணமகளைப் பூசை செய்யும்படிச் செய்து ஆசிரியர்

வந்தாய் என்மனத்தே வந்து நீ புகுந்த பின்னை
எந்தாய் போய் அறியாய் இதுவே அமையாதோ
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துஉகந்த
மைந்தா ! உன்னை என்றும் மறவாமைப் பெற்றேனே.

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாட்டைப் பாடி அவர்களையும் மணமக்களை வாழ்த்தும்படிச் சொல்லி இச்சடங்கை முடிக்கவேண்டும்.

8. எரி ஓம்பல் (ஓமம் வளர்த்தல்)

இது ஓர் அவசியமில்லாத சடங்கு. உலர்ந்த தருப்பைப் புல்லையும், சமித்து என்று சொல்லப்படும் ஆல், வேல், அத்தி, மா முதலிய மரங்களின் சுள்ளிகளையும் கொளுத்தி, அதில் நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் சுவைத்தே அறியாத அருமையான நெய்யைக் கொட்டிப் பாழாக்கிப் புகையை உண்டாக்கி, திருமணத்தைக் காண வந்திருப்பவர்களின் கண்களுக்குத் தொந்தரவு கொடுப்பது தான் ஓமம் வளர்த்தலின் பலன். இம் மாதிரி அக்கினியைப் போற்றுவதும் பூசிப்பதும், பனியும் குளிரும் அதிகமாயுள்ள மத்திய ஆசியாவில் உடைகள் இன்றி வெற்றுடம்புடன்

வாழ்ந்திருந்த ஆரியர்களுக்குத் தான் தகும்; ஏனெனில் அவர்கள் குளிரின் கொடுமையிலிருந்து தப்பித்து உயிர்வாழ அக்கினி இன்றி அமையாதது. மேலும் சக்கி முக்கிக் கற்களைக் கொண்டு கஷ்டப்பட்டு நெருப்பை உண்டாக்கிக் கொண்டிருந்த அக்காலத்தில், ஆரியர்கள் தங்கள் ஆடு மாடுகளை மேய்க்கப் புல் வெளிகளைத் தேடிக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து வந்ததால், அவர்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் சமையலுக்காக வேண்டிய நெருப்பை ஒரு மட்பாண்டத்தில் வைத்து, அவிந்து போகாமல் அதை எரிய விட்டுக் கொண்டே இருக்கவேண்டி இருந்தது. எனவே அவர்கள் மேய்த்துவந்த ஆடு மாடுகளிலிருந்து கிடைத்த நெய்யைக் கொண்டு அக்கினியை வளர்த்து அதைத் தெய்வமாகப் போற்றிவந்தார்கள்.

உஷ்ண நாடான இந்தியாவில் ஒரே இடத்தில் தங்கி வசித்து வந்த தமிழர்களுக்கு அக்கினியை ஒரு தெய்வமாகக் கொள்வது அவசியமில்லை.

ஆனால் இக்காலத்தில் தமிழருடைய குடும்ப விவகாரங்களும் சொத்துரிமை விவகாரங்களும், ஆரியர்களுடைய தர்ம சாஸ்திரங்களை அடிப்படையாக வைத்து ஆங்கிலேயரால் தயாரிக்கப்பட்ட இந்து சட்டத்தைக் கொண்டு நீதி மன்றங்களில் தீர்ப்பு செய்யப்படுகின்றன. அந்தச் சட்டப்படி திருமணம் நடக்கும்போது எரியோம்பல் செய்யப்பட்டு, அந்த அக்கினியைச் சுற்றிவரும் முறையில் மணப் பந்தரைச் சுற்றி மணமக்கள் ஏழடி (சப்தபதி) எடுத்து வைத்தாக வேண்டும். அப்படிச் செய்தால் தான் அத் திருமணம் இந்து சட்டப்படி நடந்த பிரம்ம விவாகம் ஆகும். அப்படி மணம் செய்து கொண்டவர்களுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும் தான் இந்து சட்டப்படி சில வலி உரிமைகள் கிடைக்கும். வேறு முறையில் மணம் செய்து கொண்டவர்கள் அவ்வுரிமைகளை இழந்துவிட வேண்டியதே. உதாரணமாக பிள்ளையில்லாதபோது வேறொருவருடைய பிள்ளையைத் தத்து எடுத்து வளர்த்துக் கொள்ளுதல், பிரியாத மண வாழ்க்கை, பங்காளிகளுக்கு ஆண் சந்ததி இல்லாதபோது

அவர்களுடைய சொத்துக்களுக்கு உரிமை பெறுதல் முதலிய உரிமைகளை சட்டப்படி பெறமுடியாமல் போய் விடும்.

ஆனால் இவ் வுரிமைகள் பெரும்பாலும் வீடு, மனை, நிலம், தோட்டம், துறவு முதலிய சொத்துக்களை உடைய வர்களுக்கும் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கும் தான் வேண்டியவை. ஆகையால் சொத்தில்லாத மக்களுக்கு பிரம்ம விவாகமும் அதன் இன்றியமையாத நிகழ்ச்சியான ஓமம் வளர்த்தலும் தேவையில்லை.

எரியோம்பலைச் செய்யும் முன், ஓமத்தில் எரிப்பதற் காகக் கொண்டுவரப்பட்டுள்ள சுள்ளிக் கட்டுகளிலிருந்து ஒரு நீண்ட நேரான சுள்ளியை எடுத்து, அதன் முனையில் ஒரு சிறு மாவிலையை மடக்கிக் கட்டிக் கரண்டியைப்போல செய்து வைத்துக்கொள்ளவேண்டும். சுள்ளிக் கட்டுகளில் மெல்லியதாய் உள்ள 2, 3 கட்டுகளை மாத்திரம் உப யோகித்து விட்டு, மற்றவைகளை மணவறையின் ஒரு மூலையில் ஒதுக்கி வைத்துவிட வேண்டும். எல்லாக் கட்டு களையும் எரிக்க வேண்டியதில்லை. பின்பு மணப்பந்தரின் நடுவில் மணமகனுக்கு எதிரில் தரையில் மணலைப் பரப்பி, அல்லது ஒரு முழு வறட்டியை வைத்து, ஒரு பெரிய கற்பூரக் கட்டியை (சூடன்) விளக்கில் கொளுத்தி, அந்த வறட்டியின்மேல் வைத்து, அந்தச் சுடரின்மேல் முதலில் தர்ப்பைக் கட்டையும், அதன்பின் மெல்லிய சுள்ளிகளையும் ஒவ்வொன்றாக வைக்கவேண்டும். அவை பற்றி எரியும் போது நெய்க்கின்னத்தை அந்தச் சுடரில் காட்டி, நெய் கொஞ்சம் உருகிய பின், அதைச் சிறிது சிறிதாக முன்னமே தயாரித்து வைக்கப்பட்டுள்ள மாவிலைக் கரண்டி யால் எடுத்துச் சுள்ளிகளின் மேல் விட்டுப் பெரிய சுடர் தோன்றியவுடனே ஆசிரியர் அதை இறையின் சோதி வடிவ மாகப் பாவித்து,

பொன்னானாய்! பொழில்ஏழும் காவல் பூண்ட
புகழானாய்! இகழ்வாய தொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
என்று அறிவன் ஏழையேன் உலகம் ஏத்தும்
தென்னானாய்! வடவானாய்! குட பாலானாய்!
குணபால மதானாய்! இமையோர்க்கு என்றும்
முன்னானாய்! பின்னானார் வணங்கும் சோதீ!
திருமூழிக் களத்தானாய் முதலா னாயே!

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாடலைப்பாடி சோதி வணக்கம் செய்யவேண்டும். பிறகு நெய்க் கிண்ணத்தை மணமகனுக்கு அருகில்வைத்து மாவிலைக் கரண்டியால் நெய்யைச் சிறிது சிறிதாக எடுத்து எரியில் சொரியும்படிச் சொல்லிவிட்டு, ஆசிரியர் கீழ்க்கண்ட பாடல்களை வியப்புக் குறி (!) காணும் இடங்களில் எல்லாம் நிறுத்திப் பாடிக்கொண்டும் சுள்ளிகளை ஒவ்வொன்றாக எரியில் வைத்துக்கொண்டும் இருக்கவேண்டும்.

1. புகழுநல் ஒருவன் என்கோ! பொருவில் சீர்ப்பூமி என்கோ!
திகழுந் தண்பரவை என்கோ! தீஎன்கோ! வாயு என்கோ!
நிகழும் ஆகாசம் என்கோ! நீள்சுடர் இரண்டும் என்கோ!
இகழ்வில் இவ்அனைத்தும் என்கோ! கண்ணனைக் கூவுமாறே!

2. கூவுமாறு அறியமாட்டேன் குன்றங்கள் அனைத்தும் என்கோ!
மேவுசீர் மாரி என்கோ! விளங்கு தாரகைகள் என்கோ!
நாவியல் கலைகள் என்கோ! ஞானநல் ஆவி என்கோ!
பாவுசீர்க் கண்ணன் எம்மான் பங்கயக் கண்ணனையே!

3. பங்கயக் கண்ணன் என்கோ! பவளச் செவ்வாயன் என்கோ!
அங்கதிர் அடியன் என்கோ! அஞ்சன வண்ணன் என்கோ!
செங்கதிர் முடியன் என்கோ! திருமறு மார்வன் என்கோ!
சங்கு சக்கரத்தன் என்கோ! சாதி மாணிக்கத் தையே!

4. சாதி மாணிக்கம் என்கோ! சவிகொள் பொன்முத்தம் என்கோ!
சாதி நல்வயிரம் என்கோ! தவிசில்சீர் விளக்கம் என்கோ!
ஆதியஞ் சோதி என்கோ! ஆதியெம் புருடன் என்கோ!
ஆதுமில் காலத் தெந்தை அச்சுதன் அமலனையே!

5. அச்சுதன் அமலன் என்கோ! அடியவர் வினை கெடுக்கும் .
நச்சுமா மருந்தம் என்கோ! நலங்கடல் அமுதம் என்கோ!
அச்சுவைக் கட்டி என்கோ! அறுசுவை அடிசில் என்கோ!
நெய்ச்சுவைத்தேறல்என்கோ! கனியென்கோ!பாலென்கேனோ!

6. பாலென்கோ! நான்குவேதப் பயன்என்கோ! சமயநீதி
நூலென்கோ! நுடங்கு கேள்வி இசை என்கோ! இவற்றுள்நல்ல
மேலென்கோ! வினையின்மிக்க பயன்என்கோ!கண்ணனென்கோ!
மாலென்கோ! மாயனென்கோ! வானவர் ஆதியையே!

7. வானவ ராதியென்கோ! வானவர் தெய்வமென்கோ!
வானவர் போகமென்கோ! வானவர் முற்றுமென்கோ!
ஊனமில் செல்வமென்கோ! ஊனமில் சுவர்க்கமென்கோ!
ஊனமில் மோக்கமென்கோ! ஒளிமணி வண்ணனையே!

8. ஒளிமணி வண்ணனென்கோ! ஒருவனென்று எத்த நின்ற
நளிர்மதிச் சடையனென்கோ! நான்முகக் கடவுளென்கோ!
அளிமகிழ்ந் துலக மெல்லாம் படைத்தவை எத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான் கண்ணனை மாயனையே!

9. கண்ணனை மாயன் தன்னை கடல்கடைந் தமுதம் கொண்ட
அண்ணலை அச்சுதனை அனந்தனை அனந்தன் தன்மேல்
நண்ணிநன் குறைகின்றானை ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமாறு அறிய மாட்டேன் யாவையும் யவரும்தானே!

—நம்மாழ்வார்

இப் பாடல்களைப் பாடி முடித்தவுடனே ஆசிரியர் நெய்க்கிண்ணத்தை எடுத்து எரியின்மீது கவிழ்த்து விட்டு, மணமக்களைக் கை கூப்பித்தொழும்படிச் சொல்லி,

கருமா முகில் உருவா கனல்உருவா புனல்உருவா
பெருமால் வரை உருவா பிறஉருவம் நினதுருவா

திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அருமா கடல்அமுதே உனதடியே சரணமே.

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாடலைப் பாடி எரி ஓம்பலை முடிக்க வேண்டும்.

9. மங்கல அணியை வாழ்த்தல்

இச் சடங்கு திருமணத்துக்கு வந்தோரை மணவினை நிகழ்ச்சிக்கு நேரில் கண்ட சாட்சிகளாகச் செய்கிறது.

ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கு, மஞ்சள் கொம்புகள் ஆகியவைகளை வைத்து, அவைகளின் இடையே மஞ்சள் பூசிக் குங்குமப் பொட்டிட்ட ஒரு பெரிய தேங்காயை வைக்கவேண்டும். பின் மஞ்சள் கயிற்றில் கோத்த மங்கல அணியை (தாலி) எடுத்து, அத்தேங்காயின்மேல் வைத்துக் கயிற்றைத் தேங்காயில் சுற்றி, மங்கல அணிக்கு மஞ்சள், குங்குமம் இட்டு, பூக்களையும் அதன்மீது வைக்கவேண்டும். பின்பு அத் தட்டை ஒருவரிடம் கொடுத்து, திருமணத்துக்கு வந்துள்ள எல்லாரிடமும் தொட்டு வாழ்த்துவதற்காகக் காட்டும்படி அனுப்பவேண்டும்.

அவர் பின்னாலேயே மற்றொருவர் உதிரிப் பூக்கள் நிறைந்த தட்டை எடுத்துக்கொண்டு போய், தாலி கட்டும் போது வாழ்த்தி வீசுவதற்காக வந்திருப்பவர் எல்லாருக்கும், உதிரிப்பூக்களை வழங்கும்படிச் சொல்லவும். பார்ப்பனப் புரோகிதர், உணவுக்காக உற்பத்தி செய்யப்பட்ட அரிசியில் மஞ்சளைக் கலந்து, அட்சதை என்று சொல்லி, அதை வாழ்த்துவதற்காகக் கொடுத்து வீணாக்குவது தகாத செயல் ஆகும்.

10. மகள் கொடை

மணப் பெண்ணிடம் பாதபூஜை செய்து கொண்ட இருவரும் மணவறைக்கு வந்து ஆசிரியருக்கு அருகில்

வடக்கு நோக்கி நிற்கவேண்டும். அவர்களில் தந்தையானவர் மணப்பெண்ணின் இருகைகளையும் எடுத்து மாப்பிள்ளையின் இருகைகளிலும் வைத்துக், கீழே கொடுத்துள்ள ஒப்பந்தத்தை, ஆசிரியர் முன்சொல்ல, தந்தையானவர் பின்னால் சொல்லிக் கொண்டே வரவேண்டும்.

ஒப்பந்தம் 1

மணமகனாரே !

காஞ்சீபுரம் ரங்கசாமி நாயகர் ஆகிய நானும் என் மனைவியும், எனது அருமை அண்ணன் மகளும் காஞ்சீபுரம் முருகப்ப நாயகருடைய மகளும் ஆகிய திருவளர் செல்வி தனக்கோட்டி அம்மாளை, காஞ்சீபுரம் முனிசாமி நாயகருடைய குமாரர் திருவாளர் அண்ணாமலை நாயகர் ஆகிய தங்களுக்கு வாழ்க்கைத் துணையாக,

இறைவன் ஆன்றோர் சுற்றத்தார் முன்னிலையில் எங்கள் உள்ளும் புறமும் ஒத்துக் கொடுக்கிறோம்.

நீங்கள் இருவரும் இன்று முதல் என்றும் நிலைத்த பேரன்பு உடையவராய், இல்லற வாழ்க்கையைச் செம்மைபெற நடாத்தி, வருவிருந்தோம்பி, நன்மக்கள் பெற்றுப், பிரிவின்றி நீடுழி இனிது வாழ்க ! வாழ்க !

மேற்படி ஒப்பந்தத்தைப் பெண்ணின் தந்தையார் சொல்லும்போது தாயார் உடனிருந்து கேட்க வேண்டும். பின்பு ஆசிரியர் பெண்ணின் தாய் தந்தையரின் கைகளில் உதிரிப் பூக்கள் சிலவற்றைக் கொடுத்து, அவைகளை மணமக்கள்மீது சொரிந்து வாழ்த்திவிட்டு, அங்கேயே இருந்து மேல் நடப்பதைக் கவனிக்கும்படிச் சொல்லவேண்டும்.

11. தாலி கட்டுதல்

பிறகு, கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தை ஆசிரியர் முன் சொல்ல, மணமகன் பின்னால் சொல்லிக் கொண்டே வரவேண்டும் :

ஒப்பந்தம் 2

பெரியோர்களே !

எல்லாம் வல்ல இறைவன் அருளால் காஞ்சிபுரம் முருகப்ப நாயகருடைய மகள் ஆகிய தனக்கோட்டி அம்மாள் என்ற இச் செல்வியை எனது இல்லற வாழ்க்கைக்குத் துணையாக நான் ஏற்றுக் கொள்கிறேன். இனி இவளைப் பிரியேன். நாங்கள் இருவரும் உடலும் உயிரும் போலவும், கண்ணும் இமையும் போலவும் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்க அருள் செய்யும்படி இறைவனை வேண்டுகிறேன்.

[இச்சமயத்தில் ஆசிரியர் மங்கல அணியை (தாலியை) மணமகன் கையில் சேர்க்கவேண்டும்.]

இவ்வொப்பந்தத்துக்கு அறிகுறியாக இந்த மங்கல அணியை இச்செல்விக்கு அணிவிக்கிறேன்.

ஆசிரியர் இச்சமயத்தில் மேளம் கொட்டும்படிச் சொல்லி அனுப்பவேண்டும்.

குறிப்பு : மேற்படி ஒப்பந்தங்களில் உள்ள இடப்பெயர்களையும் நூல் பெயர்களையும் சமயத்துக்கு ஏற்றவாறு ஆசிரியர் மாற்றிச் சொல்லவேண்டும்.

சில குடும்பங்களில், திருமணம் பட்டப் பகலில் நடப்பினும், ஓர் ஆழ்ந்த தட்டில் அறைத்த மஞ்சளையும் சுண்ணாம்பையும் நீரில் கரைத்து (ஆலம்), அதன்மேல் காமாட்சியம்மன் விளக்கு ஒன்றை ஏற்றி வைத்து, மணமகன் தாலி கட்டி 3 முடிச்சுகள் போடும் போது காட்டுவார்கள். மணமகன் அம் முடிச்சுக்கு மஞ்சள் பூசி, குங்குமம் இடுவதும் சில குடும்பங்களில் உண்டு.

திருமணத்திற்கு வந்திருப்பவர் எல்லோரும் மணமக்களை வாழ்த்தி மலர் சொரியவேண்டும்.

12. ஆசிரியரின் வாழ்த்து

தாலி கட்டினவுடனே ஆசிரியர், மணமகனுக்குக் காலில் மெட்டும், மணமகளுக்குச் சுற்றும், இருவர்க்கும் பட்டங்களும் அணியும்படிச் சொல்லிவிட்டு, மணமக்களை நோக்கி,

மணமக்களே !

செந்தமிழ் நாட்டில் காஞ்சீபுரத்தில் கீழண்டை ராஜ வீதியில் வன்னியர் சத்திரத்தில் விசு ஆண்டு ஆவணித் திங்கள் 29-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்குமேல் 10 மணிக்குள் ஆன நற்பொழுதில் திருமணஞ் செய்துகொண்ட நீங்களிருவரும்,

நிலைத்த பேரன்புடையராய் ஒருவருக்கொருவர் ஆதரவாக, இல்லறம் நடாத்தி, இன்பம் திளைத்து, நன்மக்கள் பெற்று, நயம்பட வாழ்ந்து, ஆல்போல் தளிர்த்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கிலன்ன சுற்றம் முசியாமல் வாழ்வோங்கி, நீடூழி வாழ்க ! வாழ்க !

என்று சொல்லி, மலர்களை மணமக்கள்மேல் சொரிந்து வாழ்த்தவும்.

பின்னர் சர்க்கரை அல்லது கற்கண்டை வந்திருப்பவர்களுக்கு வழங்கும்படிச் சொல்லிவிட்டு, ஆசிரியர்

வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழிநான்!

நாளை வதுவை மணம் என்று நாளிட்டு
பாளைக் கமுகு பரிசுடைப் பந்தல் கீழ்

கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழிநான்! —ஆண்டாள்

என்ற பாட்டை இசையுடன் பாடவேண்டும்.

13. மாலை மாற்றல்

மண மக்களிருவரும் எழுந்து மணவறைக்கு அடுத்து வெளியில் நின்று மும்முறை மாலை மாற்றிக் கொள்ள வேண்டும். முதலில் மணமகள் தன்மாலையை மணமகனுக்கிட, பின் மணமகன் தன் மாலையை மணமகளுக்கிட, இப்படி 3 தடவை மாற்றியிட்ட பின், மண்மகளின் மாலை மணமகன் கழுத்திலும், மணமகனின் மாலை மணமகளின் கழுத்திலும் இருக்கும்.

14. தீ வலம்வருதல்

பின்பு மணமகளின் கையை மணமகன் பிடித்துக் கொண்டு மணவறையை மும்முறை வலமாகச் சுற்றிவர வேண்டும். அப்படிச் செய்யும்போது, பகலில் காண முடியாத அருந்ததி நட்சத்திரத்தைப் பார் என்று மணமகன் மணமகளுக்குக் காட்டுவதும், மணமகளின் காலைத் தூக்கி மணமகன் பந்தரில் வைக்கப்பட்டுள்ள அம்மியின்மீது வைப்பதும் ஆன அறிவற்ற, ஆபாசமான சடங்குகளைச் செய்யக் கூடாது. 3 முறை சுற்றிவந்தபின், மணமக்களும் மணமகனுக்கு மைத்துனரும் மணவறை புகுந்து, ஆங்குள்ள ஓம அக்கினியின்மேல் மணமகள் தன் இருகைகளை அகழி மாதிரி சேர்த்துப் பிடிக்க, அதன்மேல் மணமகன் தன் கைகளைப் பிடிக்க, அதற்குமேல் மைத்துனர் தன் கைகளைப் பிடிக்க, மைத்துனரின் கையில் புரோகிதர் நெற்பொரியைச் சொரிய, அதை மைத்துனர் மணமகனின் கையில் விட மணமகன் மணமகளின் கைகளில் விட, மணமகள் கீழேயுள்ள அக்கினியில் சொரியும் சடங்கு ஒன்று சில குடும்பங்களில் நடைபெறும். உடனே பொரி இட்ட மைத்துனன் கையில் மணமகன் பொன்மோதிரம் இட்டு, தாம்பூலமும் பூவும் வழங்கி மரியாதை செய்வார்.

பின்னர் மணமக்கள் முன் உட்கார்ந்திருந்த இடத்தி லேயே இடம் மாறி, அதாவது மணமகனுக்கு இடப்பாகத் தில் மணமகள் இருக்கும்படி அமரவேண்டும். அம் மாதிரிதான் கயிலாயத்தில் பாமசிவனும் பார்வதியும் இப் போது வீற்றிருக்கிறார்களாம்.

15. வாழ்த்துகள்

இதில் முக்கியமானது சேஷை என்பது. இது ஓர் அனுவசியமான சடங்கு. அதிலும் அரிசியை பங்கீடு (ரேஷன்) செய்யும் இக்காலத்தில் செய்யத்தகாதது.

மணமக்களை வாழ்த்துவதற்காக வண்ணானைக் கொண்டு ஒரு வெள்ளை ஆடையை மணமக்களுக்கு எதிரில் தரையின் மேல் விரித்துப் போட்டு, ஒரு முக்காலியை வைத்து, அதன்மேல் ஒரு பெரிய தட்டில் அரிசியை வைப்பார்கள். திருமணத்தைக் காண வந்தவர்களில் சில பெரியோர்களை அழைத்துத் தட்டில் உள்ள அரிசியை இரண்டு கைகளிலும் எடுத்து மணமக்களுக்கு எதிரில் உயரத்திலிருந்து சொரியும்படிச் செய்வார்கள். அப் பெரி யோர்கள் மணவறையில் நுழைந்தவுடனே மணமக்களை வாழ்த்த அவர்கட்கு சில உதிரிப் புஷ்பங்களை ஆசிரியர் கொடுக்கவேண்டும். அவர்கள் அரிசியைச் சொரியும் போது ஆசிரியர் கீழ்க்கண்ட பாடல்களை மெதுவாகப் பாடிக் கொண்டே இருக்கவேண்டும். அப்பெரியோர்கள் மணப் பந்தரை விட்டுப் போகும் போது மணமக்கள் அவர்களுக்கு வணக்கம் செய்யவேண்டும்.

சேஷை இடுவது நடக்கும் போது மணஆசிரியர் கீழ்க்கண்ட பாடலைப் பாடிக்கொண்டே முதலில் சேஷையிட வேண்டும்.

வன்பெரு வானகம் உய்ய அமரர்உய்ய மண்உய்ய
மண்ணுலகினில் மனிதர் உய்ய
துன்பமிகு துயர் அகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர
அகமகிழும் தொண்டர் வாழ

அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து அடியார்தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கும்நாளே!

—குலசேகர ஆழ்வார்

பொலிக! பொலிக! பொலிக!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்!
நலியும் நரகமும் நைந்த! நமனுக்கு
இங்கு யாதொன்றும் இல்லை!
கலியும் கெடும்! கண்டுகொண்மின்!
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழிதரக் கண்டோம்!

கண்டோம்! கண்டோம்! கண்டோம்!
கண்ணுக்கு இனியன கண்டோம்!
தொண்டீர் எல்லீரும் வாரீர்!
தொழுது தொழுதுநின்று ஆர்த்தும்!
வண்டார் தண்ணம் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின் றனவே!

—நம்மாழ்வார்

தூவடிவில் பார்மகள் பூமங்கையோடு
சுடர்ஆழி சங்குஇருபால் பொலிந்துதோன்ற
காவடிவில் கற்பகமே போல நின்று
கலந்தவர்கட்கு அருள்புரியும் கருத்தினானை
சேவடிக்கை திருவாய்கண் சிவந்த ஆடை
செம்பொன்செய் திருவுருவம் ஆனான் தன்னை
தீவடிவில் சிவன்அயனே போல்வார் மன்னு
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே!

—திருமங்கை ஆழ்வார்

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாமும் நம்பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெ லூடு கயல்உகள

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து. —ஆண்டாள்

சேஷை யிடுவதைவிட மணமக்களின் நண்பர்கள் வாழ்த்துப் பத்திரங்களை வாசித்தளித்தல், அறவுரைகள் கூறல் முதலியவைகளைச் செய்வது மிகவும் நல்லது.

16. மொழி

(மணமக்களுக்கு பரிசுகள் வழங்குதல்)

உறவினரும் நண்பர்களும் மணமக்களுக்கு மொழி எழுதுவது மணமக்கள் வீட்டாருக்குப் பேருதவியா யிருக்கும் ஒரு சடங்கு. ஆனால் மொழி எழுதினவர் வீட்டில் திருமணம் நடக்கும்போது திருப்பி மொழி எழுதுவதற்குக் கையில் பணம் இல்லாவிட்டால் மனதில் ஏற்படும் தொந்தரவு கொஞ்சமல்ல. ஆகவே இந்த வீண் தொந்தரவை ஏன் விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று பலர் மொழி வாங்குவதை அறவே நீக்கிவிடுகிறார்கள்.

மொழிக்குப் பதிலாகத் தங்க, வெள்ளிச் சாமான்களை மணமக்களுக்குப் பரிசாக வழங்குவாரும் உண்டு.

மொழி எழுதப்படும்போது ஆசிரியர், கொடுக்கும் பணத்தைக் கையில் வாங்கிக் கொண்டு,

தோழர் அண்ணாமலைக்கும் தோழியர்
தனக்கோட்டி அம்மாளுக்கும் நடைபெற்ற
திருமணத்தின்போது, சென்னை திருவாளர்
முருகேச நாயகர் மணமகனுக்கு வாழ்த்தி
அளித்த பரிசு ரூபாய் ஐந்து

என்று உரக்கச் சொல்லித் தன் எதிரில் வைக்கப்பட்டிருக்கும் தட்டில் அந்த ரூபாயை வைக்கவேண்டும். மேற்படி பெயர்களையும் தொகையையும் மணமக்கள் வீட்டார் எழுதிக் கொள்ளும்படிச் சொல்லவேண்டும்.

16. காப்புக் களைதல்

சிலர் இச்சடங்கை மாத்திரம் மாலை வேளையிலோ அல்லது மறுநாளோ வைத்துக் கொள்ளவேண்டுமென்று விரும்புவார்கள்; அப்படிச் செய்வதாயிருந்தால் ஆலம் (சுண்ணும்பும் மஞ்சளும் கலந்த நீர்) கொண்டுவந்து மணமக்களுக்குச் சுற்றியபின், மணமக்களைஎழுந்து மணவறையை வலமாக 3 முறை சுற்றிக்கொண்டு போய் மனைபுகுந்து பாலும் பழமும் உண்ணும்படிச் சொல்லவும்.

ஆனால் சுருக்கமான முறையில் மணம் செய்வதே நல்லது; செலவும் குறையும்; ஆகையால் காப்புக்களை தலைத் தொடர்ச்சியாகவே நடத்திவிடுவது நல்லது.

ஆசிரியர் கற்பூரதீபம் ஏற்றி, மணமக்கட்கு எதிரில் உள்ள ஒரு விளக்கின் சோதியைக் கைகூப்பித் தொழும்படி அவர்களுக்குச் சொல்லிவிட்டு

அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு!
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு!
வடிவார் சோதி வலத்து உறையும்
சுடர் ஆழியும் பல்லாண்டு!
படைபோர் புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே!

—பெரியாழ்வார்

என்ற பாடலைப் பாடவேண்டும். முடிந்தவுடன் காப்புக் கட்டியிருந்தால், மணமகன் கையிலிருக்கும் காப்புக் கயிற்றை ஆசிரியர் அவிழ்த்துவிட்டு, மணமகளின் கையி லுள்ள கயிற்றை அவிழ்க்கும்படி மணமகனுக்குச் சொல்லவும். காப்புக் கட்டுதல் நடைபெறுதிருந்தால் ஷெ திரு விளக்கு வழிபாட்டுடன் மணவினை முற்றுப்பெறும்.

பிறகு மணமக்களுக்கு ஆலம் சுற்றிக் கண்ணேறு கழித்தவுடன், மணமக்கள் எழுந்திருந்து, மணவறையை வலமாகச் சுற்றிக்கொண்டு போய் மனை புகுந்து பாலும் பழமும் சாப்பிடுவது வழக்கம்.

இச்சமயத்தில் மணமக்களுக்கு முன்னே சிறு பெண்கள் முளைவளர்த்த பாலிகைகளையும் விளக்கையும் கையில் ஏந்தி முன்னே செல்வது வழக்கம்.

18. மணவினையைக் காண வந்தோர்க்கு உபசரிப்பு

மணமக்கள் மணவறையை விட்டு எழுந்தவுடனே, மண ஆசிரியர் திருமணத்திற்கு வந்திருப்போர் இடையில் அமர்ந்து, கோயில், சங்கம், பத்திரிகைகள் முதலியவைகளுக்குத் திருமணத்தை முன்னிட்டு ஏதாவது நன்கொடை மணவீட்டார் அளிப்பதாயிருந்தால், அதை வாங்கி, உரியவர்களுக்கு வெற்றிலைப் பாக்கு சந்தனம் பூக்களோடு வழங்க வேண்டும். பின்பு மணவிழாவினைக் காண வந்திருக்கும் எல்லாருக்கும் சமத்துவமாய், (முன்னாலே பார்ப்பாருக்கு, பிற்பாடு அன்னிய சாதியாருக்கு, கடைசியில் நம் சாதியாருக்கு என்று சிலர் நடத்துவது மானமற்ற முறை) சந்தனம், பன்னீர், பூக்கள், வெற்றிலைப்பாக்கு வழங்கும்படிச் செய்யவேண்டும். அதற்குப் பின்

வாழ்க தமிழ் மொழி !
வாழ்க நல் தமிழர்கள் !
வாழ்க தமிழகம் !
வாழ்க தமிழ்ப் பெரியார் !

என்று வாழ்த்துச் சொல்லி முடிக்கவும். பின் மணவிருந்து நடைபெறும்.

திருமணம் நிகழ்ந்த அன்றிரவே மணமக்கள் இருவரும் ஒன்று கூடி வாழத் தொடங்கல் சாலச் சிறந்தது. பழந்தமிழர்களின் வழக்கமும் இதுவே. இதற்கென யாதொரு சடங்கும் தேவை இல்லை; வேறொரு நல்ல நாளும் தேட வேண்டியதில்லை.

மணவினைக்கு வேண்டிய பொருள்கள்

ஆசிரியருக்கு பெரியமணை, மணமக்கட்கு நீண்டமணை, செம்பில் - தண்ணீர், முக்காலியின்மேல் தட்டு, பாத பூசைக்குப் பெரிய தட்டு, பெரிய தட்டில் - கூறை சேலை, வேஷ்டிகள், அறைத்த மஞ்சள், குங்குமம், திருத்துழாய், குத்துவிளக்கு, தட்டு நிறைய - உதிரிப்பூக்கள், தூபகலசம், தேங்காய்-2, நூல் கயிறு, தாலி கயிறு, சந்தனம்-கிண்ணத்தில், பன்னீர் - செம்பில், வெற்றிலைப் பாக்கு - தட்டில், மங்கல அணி, சர்க்கரை அல்லது கற்கண்டு, மிட்டாய், கற்பூரம், சாம்பிராணி, ஊதுவத்திகள், ஆலம் - தட்டில்.

ஓமம் வளர்த்துவதா யிருந்தால் : மணல், வறட்டி, தருப்பைக் கட்டு, சுள்ளிக்கட்டுகள், கிண்ணத்தில் - நெய், மாவிலை.

திருமணத்தின்போது மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவு ஆற்றுவோர்க்கு உதவியாய் இருக்கக்கூடிய

அறவுரைகள்

1. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
பண்பும் பயனும் அது.

2. *அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

3. *மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்*
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

4. *பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
திண்மை உண்டாகப் பெறின்.

5. *தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

—திருக்குறள்

6. *இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை*

—ஔவையார்

7. குலமகட்கு அழகுநன் கொழுநனைப் பேணுதல்
—வெற்றிவேற்கை

8. மாசிலாக் குலத்துவந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள் கொண்கன் நினைப்பறிந்தொழுகு
[நீராள்
தேசுறுவாய்மை உள்ளாள் சினந்திடல் என்றுமில்லாள்
பேசுதிண்கற்புவாய்த்தாள் பெற்றதே கொண்டுவப்பாள்
—தேவராசப்பிள்ளை

கோயில் திருமணம்

இது கோயிலில் இருக்கும் மண்டபம் ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதில் புரோகிதரைக் கொண்டு செய்துகொள்வதல்ல. அம்மாதிரி செய்வது சாதாரணத் திருமணமே ஆகும். ஆனால் கோயில் திருமணம் என்பது மிகச் சுலபமான முறை. இல்லத்தில் சுற்றத்தினரும், நண்பர்களும் வந்து கூடியுள்ளபோது, மண மக்கள் மலர் மாலைகளையும் புத்தாடைகளையும் உடுத்திக்கொண்டு, பெற்றோர்களும் மற்ற சில உறவினரும் துணையாக வரக், கோயிலுக்குப் போய் அங்கே சாமிக்குத் தீபாராதனை செய்யச் சொல்லி, சாமியின் முன்னிலையில் தாலி கட்டிக் கொண்டு, மாலை மாற்றிக்கொண்டு, வீட்டுக்கு வந்து விடுவார்கள். வீட்டில் திருமணத்துக்கு வந்திருப்பவர்களின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டு அவர்களோடு விருந்துண்பார்கள்.

சுயமரியாதைத் திருமணம்

மணமக்களிருவரும் சமத்துவ உணர்ச்சியும் சமத்துவ நிலையும் உடையவராய், மணம்செய்து கொள்ளும் முறை 'சுயமரியாதைத் திருமணம்' எனப்படும்.

ஆனால் இம்முறை இந்து சட்டப்படி சரியான திருமணம் ஆகாது ; எனவே, தத்து எடுத்தல் முதலிய உரிமை

களைப் பெற விரும்புவோர், இம் முறைப்படி திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

மணமக்கள் கீழே கொடுத்துள்ள ஒப்பந்தத்தைத் தனித்தனிக் காகிதங்களில் எழுதி, சபையோருக்குக் கேட்கும்படி உரக்கப் படித்துவிட்டுப் பின், மாலை மாற்றிக் கொள்ளல், தாலி கட்டிக்கொள்ளல் முதலிய வினைகளை நடத்திக்கொள்ள வேண்டும். சிலர் தாலி கட்டமாட்டார்கள். பின் சபையோர்க்கு உபசரிப்பு நடைபெறும்.

ஒப்பந்தம்

என் உயிர் அனையீர் !

இறைவன் திருவருளால் இந்நன்னாளிலே பெரியோர்கள் முன்னிலையில் எனது இல்லற வாழ்க்கைக்குத் துணையாகத் தங்களை ஏற்றுக்கொள்கிறேன் இன்று முதல் என் மனதாலும் சொல்லாலும் செயலாலும் தங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும்படியும், தங்கள் மனம் நோவாதவாறும் நான் நடந்துகொள்வதாக உறுதி கூறுகிறேன். நாம் இருவரும் சமத்துவமும் சமஉரிமைகளும் உடையவராய், ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து இல்லறம் நடத்த அருள் செய்யும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு

....

நல்ல காகிதத்தில் இடம், தேதி, இரண்டு சாட்சிகள் ஆகியவைகளுடன் மேற்படி ஒப்பந்தத்தின் இரண்டு பிரதிகள் தயாரித்து, அவற்றுள் ஒன்றில் மணமகன் கையொப்பமிட்டு, மணமகளிடம் கொடுக்கவேண்டும். அதே மாதிரியாக மற்ற பிரதியில் மணமகள் கையொப்பமிட்டு, மணமகனிடம் கொடுக்கவேண்டும். இப்பத்திரங்கள் இத் திருமணம் நடைபெற்றதற்கு நிலைத்த வலுவான சாட்சிகளாகும்.

பதிவுத் திருமணம் (Register Marriage)

இதை ரிஜிஸ்தர் மணம் என்றும் சொல்வார்கள் முதலில், மணம் செய்துகொள்ள விரும்பும் காதலர்கள்,

தாங்கள் ஒருவரை யொருவர் மணக்க விரும்புவதாக விண்ணப்பங்களைத் தயாரித்து திருமண ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு அனுப்ப வேண்டும். அதைப் பதிவு செய்ய ஒரு ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

உடனே ரிஜிஸ்தரார், அவர்களுடைய திருமணத்துக்கு யாராவது ஆட்சேபிக்கிறார்களா என்றறிய, அவரது ஆபீசில் பொதுமக்கள் பார்க்கும்படி ஒரு விளம்பரத்தை ஒட்டி வைப்பார். அது 15 நாள் அங்கேயே இருக்கும்.

அந்த கெடுவுக்குப்பின், தமக்கு வந்த ஆட்சேபனைகளை ரிஜிஸ்தரார் ஆராய்ந்து பார்த்து, சட்டப்படி செய்யத்தக்க ஆட்சேபனை ஒன்றும் இல்லாவிடில், 3 மாத காலத்துக்குள் ஏதாவது ஒரு நாளைக் குறித்து, அக் காதலர்கள் தங்கள் மணத்தைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிப்பார்.

பின்னர் காதலர்கள் குறித்த நாளில் ரிஜிஸ்தரார் ஆபீசுக்குச் சென்று ரூ. 3. கட்டணம் செலுத்திவிட்டு, தாங்கள் ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வதாக உறுதி கூறித் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதற்கு 3 சாட்சிகள் வேண்டும். பின் அக் காதலர்கள் சட்டப்படி திருமணம் செய்து கொண்டதாக ரிஜிஸ்தரார் தெரிவிப்பார். உடனே காதலர்கள் தாலி கட்டிக்கொள்வது, மாலை சூட்டிக்கொள்வது, மோதிரங்களை மாற்றிக்கொள்வது போன்ற சடங்குகளை வேண்டுமானால் அங்கேயே நடத்திக்கொண்டு ரிஜிஸ்தராரிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு சென்று உற்றார் உறவினருடன் விருந்துண்பார்கள்.

இம்மாதிரியான பதிவை தங்கள் வீட்டிலேயே நடத்திக் கொள்ள வேண்டும் என்று காதலர்கள் விரும்பினால், ரூ. 15 கட்டணமாகச் செலுத்தவேண்டும். அப்போது காதலர்களால் குறிக்கப்பட்ட நேரத்தில் ரிஜிஸ்தரார் அவர்களுடைய வீட்டுக்கு வந்து திருமணத்தைப் பதிவு செய்துகொண்டு போவார்.

மாதிரி திருமண அழைப்பு இதழ்

திருமண அழைப்பு

அன்புடையீர் !

விசு ஆண்டு ஆவணித் திங்கள் 29-ம் நாள் (14-9-1941) ஞாயிற்றுக்கிழமை காலை $8\frac{1}{2}$ மணிக்கு மேல் 10 மணிக்குள்,

எனது தமையனார் முனிசாமி நாயகர் மகன்
திருநிறைச் செல்வன்
சி. வி. எம். அண்ணாமலைக்கும்

காஞ்சிபுரம் - திரு. முருகப்ப நாயகர் மகள்
திருநிறைச் செல்வி
தனக்கோட்டி அம்மாளுக்கும்

காஞ்சிபுரம், கீழண்டை ராசவீதி, வன்னியர் சத்திரத்தில், சென்னைத் திருவாளர் - அ. கு. பாலசுந்தர நாயகர், பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

அச்சமயம் திருவாளர்கள் வித்வான் - சக்கரபாணி நாயகர், வித்வான் - ம. ராசமாணிக்கம் பிள்ளை, க. வச்சிர வேலு முதலியார், பி. ஏ., எல். டி. முதலிய பேரறிஞர்கள் 'தமிழர் திருமணம்' என்பதுபற்றியும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

அன்று மாலை **5** மணிக்கு திருவாளர் டி. பச்சையப்பா அவர்களால் இன்னிசை அரங்கு நடத்தப்பெறும்.

தாங்கள் உற்றாருடன் வந்திருந்து மணமக்களை வாழ்த்துமாறு வேண்டிக்கொள்கிறேன்.

வெ. முத்து நாயகர்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும்:—

சி. வி. எம். கோவிந்தராச நாயகர். காஞ்சி.
டி. எம். பசுபதி நாயகர், சென்னை.
[illegible]துரை நாயகர், படுந்தூர்.

சாந்தி முகூர்த்தம்

இது ஒரு மிகமிக அனுவசியமான சடங்கு. இதைச் சாந்தி கல்யாணம் என்றும் சொல்லுவார்கள். இதற்கு பார்ப்பனப் புரோகிதரோ வேறு எவரோ தேவை யில்லை.

இரவில் கொஞ்சம் முன்னதாகவே அதாவது 8 மணிக்குள்ளாகவே, குறைந்த அளவுள்ள உணவை மணமக்கள் அருந்திவிட வேண்டும். மணமகன் படுக்கையறை புகுந்த பின், மணப்பெண்ணின் தாயோ அல்லது அவள் உடனிருப்பவளோ அப்பெண்ணை அழைத்துக் கொண்டுபோய் படுக்கை அறையைச் சிறிது திறந்து உள்ளே நுழைத்து விட்டு வந்து விடவேண்டும். அவ்வளவுதான். பின் நடக்கவேண்டிய தெல்லாம் இயற்கையே முன்னிருந்து நடத்திவிடும்.

அன்றிரவு காதலர் நெடுநேரம் விழித்துக்கொண்டு இருப்பார்கள் ஆகையால், இருவரும் மிக லேசான உணவை அருந்தவேண்டும்.

இதை திருமணம் நடந்த அன்றிரவே நடத்துவது நல்லது. இதற்காக வேறு நல்ல நாள் பார்க்க வேண்டியதும் இல்லை; ஒரு பார்ப்பனப் புரோகிதரும் தேவை இல்லை.

புஷ்பிணி முகூர்த்தம்

இதை ருதுசாந்தி முகூர்த்தம் என்று சொல்வது தவறு. ருதுவான பெண்ணை, ருதுவான 9 அல்லது 11-ம் நாள் காலையில் குளிப்பாட்டி, ஆடையாபரணங்களால் அலங்கரித்து, நடுவாசலில் நாலுபக்கமும் குத்துவிளக்குகளை வைத்து, நடுவில் உட்காரவைப்பார்கள். அப்பெண்ணுக்கு முன்னே ஒரு முக்காலியின் மேல் ஒரு தட்டில் புட்டு, சர்க்கரை, நெய் முதலியவைகளை வைப்பார்கள். பிறகு 5, 6 கட்டுக்கழுத்திகள் ஒவ்வொருவராக அந்தப் பெண்ணுக்குச் சந்தன நலங்கு இட்டு, எதிரே வைத்துள்ள புட்டுத் தட்டை எடுத்துச் சுற்றுவார்கள். அதற்குப் பிறகு தான் ஆசிரியர் வடக்கு நோக்கி அமரவேண்டும்.

1. இறை வணக்கம் : பக்கம் : 9 பார்க்க.

2. ஓமம் வளர்த்தல்

இதை ஆசிரியரே பக்கம் 14 - ல் சொல்லியிருப்பது போலச் செய்ய வேண்டும்.

3. பரிசுகள் வழங்கல்

ருதுவான பெண்ணின் அம்மான்மார்கள், மற்ற உறவினர்கள், நண்பர்களும் பெண்ணுக்கு ஆடை யாபரணங்கள், பணம் முதலியவைகளைப் பரிசாக வழங்குவார்கள். அவற்றை ஆசிரியர் வாங்கி, அவர்களுடைய பெயர்களைச் சொல்லி, பெண்ணின் தகப்பனாரிடம் சேர்த்துவிட வேண்டும். இதோடு ஆசிரியரின் வேலை முடிவடையும்.

4. கண்ணேறு கழித்தல்

பிறகு ஒரு தேங்காயின் மேல் கற்பூரம் ஏற்றிவைத்து, பெண்ணைச் சுற்றி கண்ணேறு கழித்துவிட்டு, எழுப்பி வீட்டுக்குள்ளே அழைத்துச் செல்வார்கள். இதோடு இச்சடங்கு முடிவுறும். பின்னர் வந்தவருக்கு சந்தனம், பன்னீர், வெற்றிலைப்பாக்கு, மஞ்சள், பூ வழங்கும் உபசரிப்பும், விருந்தும் நடக்கும்.

நிச்சயார்த்தம்

பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் திருமணத்துக்குச் சம்மதித்தவுடனே, தங்கள் சம்மதத்தை உறுதிப்படுத்த வேண்டி, இச் சடங்கை பெண்வீட்டில் ஒரு நல்ல நாளில் சாயங்கால வேளையில் நடத்திக் கொள்வது வழக்கம். பெண்வீட்டார் தங்கள் சுற்றத்தாரையும் நண்பர்களையும் வரவழைத்து, அவர்கள் முன்னிலையில் தாங்கள் தங்கள் பெண்ணை இன்னாருடைய பிள்ளைக்குக் கொடுக்கப் போவதாக வாக்குறுதி செய்வர். பிள்ளை வீட்டாரும் தாங்கள் அப்பெண்ணைத் தங்கள் பிள்ளைக்கு மனைவியாகக் கொள்வதாக வாக்குறுதி செய்வர். தங்கள் உறுதிப்பாட்டுக்கு அடையாளமாகத் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பூக்கள், மிட்டாய் தினுசுகள் அடங்கிய பலதட்டுகளையும், ஆடை, ஆபரணங்களையும் பிள்ளை வீட்டார் மணப் பெண்ணுக்குப் பரிசாக அளிப்பார்கள்.

இச் சடங்கு சாதாரணமாகத் திருமணத்துக்குச் சில நாட்கள் அல்லது மாதங்களுக்கு முன் நடக்கும். சிலர் திருமணம் நடக்கும் அன்றே திருமணத்துக்குச் சிறிது முன்பு மணப்பந்தரிலேயே இதை நடத்துவார்கள். இம் மாதிரி செய்வது அனுவசியமான செயல் ஆகும்.

இச் சடங்கைத் தொடங்கு முன்பே புரோகிதரோடு கலந்து மணமக்களின் பெற்றோர் திருமண நாளைக் குறித்துக்கொள்வார்கள். அந்நாளில் இம் மண மக்கட்குத் திருமணம் நடக்கும் என்று, காலமும் இடத்தையும் குறித்துத் திருமணப்பத்திரிகை ஒன்றை ஒரு நல்ல காகிதத்தில் புரோகிதர் எழுதிவைத்துக்கொள்வார். திருமண நாளைக் குறிக்க முடியாத போது இப்பத்திரிகையை எழுத மாட்டார்கள்.

மேலும் இச் சடங்கைத்தொடங்கு முன் பிள்ளை வீட்டார் மணப்பெண்ணுக்கு அளிக்கப் போகும் ஆடை

ஆபரணங்கள், வெற்றிலைப் பாக்கு மஞ்சள், குங்குமம், பூமாலைகள், சர்க்கரை, கற்கண்டு, முந்திரிப்பருப்பு, பாதம் கொட்டை, பேரீச்சம்பழம், பலவித பழங்கள் முதலிய வரிசைகள் அடங்கிய 5, 7, 9 அல்லது 11 தட்டுகள் சபையோர் முன்னிலையில் ஆசிரியருக்கு எதிரில் வைக்கப் படவேண்டும். ஒரு குத்துவிளக்கையும் கொளுத்தி, அதற்குப் பூச்சூட்டி, ஆசிரியருக்கு எதிரில் வைக்கவேண்டும். அறைத்த மஞ்சள், குங்குமம், உதிரிப் பூக்கள் அடங்கிய தட்டு ஒன்று ஆசிரியருக்கருகில் இருக்கவேண்டும்.

1. இறை வணக்கம்

பக்கம் : 9 பார்க்க.

2. சோதி வழிபாடு

பிறகு ஆசிரியர் மணமக்களின் தந்தையர்களை தன் இடது பக்கத்தில் கிழக்கு நோக்கி உட்காரும்படிச் செய்து, அவர்கள் முன்னிலையில் பூத்தட்டை வைத்து விளக்கின்மீது பூக்களை ஒவ்வொன்றாய்ச் சாற்றும்படிச் சொல்லி விட்டு,

பொன்னாய்! பொழில்எழும் காவல் பூண்ட — பக்கம் : 17
கருமா முகில்உருவா கனல்உருவா புனல்உருவா — ,, 18

என்ற இரண்டு பாடல்களைப்பாடி, கடைசியில் கற்பூர தீபம் காட்டிச் சோதி வழி பாட்டை முடிக்க வேண்டும்.

3. ஒப்பந்தங்கள்

பின்னர் மணமக்களின் பெற்றோர்களை ஒருவரை யொருவர் பார்க்கும்படி உட்காரச் செய்து, பெண்ணின் தகப்பனார் பிள்ளையின் தகப்பனாரை நோக்கி,

காஞ்சிபுரம் முருகப்ப நாயகர் ஆகிய நான், விசு ஆண்டு ஆவணித் திங்கள் 1-ம் நாள் (17—8—1941) ஞாயிற்றுக்கிழமை காலை 8-30—10 மணி ஆன நற்பொழுதில், என் மகள் திருவளர் செல்வி தனக்கோட்டி அம்மாளை, காஞ்சிபுரம் முனி சாமி நாயகருடைய மகன் திருவளர் செல்வன் அண்ணாமலைக்கு வாழ்க்கைத் துணையாகக் கொடுப் பதாக என் முழு மனதுடன் வாக்குறுதி செய் கிறேன். இதை நிறைவேற்றத் தவறேன்.

என்று சொல்லி ஒருதட்டில் வெற்றிலை, பாக்கு, தேங்காய், பூக்கள் வைத்து பிள்ளையின் தகப்பனுருக்குக் கொடுத்து மாலை சூட்டி மரியாதை செய்யும்படிச் சொல்லவும்.

குறிப்பு :— இவ் ஒப்பந்தத்தில் உள்ள பெயர்களை ஆசிரியர் சமயத்துக்கு ஏற்றாப்போல் மாற்றிச் சொல்லவும்.

பின்னர் பிள்ளையின் தகப்பனர் பெண்ணின் தகப்ப னரை நோக்கி,

விசு ஆண்டு ஆவணித் திங்கள் 29-ம் நாள் (14-9-1941) ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணிக்கு மேல் 10 மணிக்குள்ளான நற்பொழுதில், காஞ்சி யில் நடக்கப்போகும் திருமணத்தில் எனது மகன் திருவளர் செல்வன் அண்ணாமலைக்கு, காஞ்சிபுரம் முருகப்ப நாயகர் ஆகிய உங்கள் மகள் திருவளர் செல்வி தனக்கோட்டி அம்மாளை வாழ்க்கைத் துணையாகக் கொள்வதாக உறுதிகூறுகிறேன்.

என்று சொல்லி, ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கு தேங்காய் பூக்கள் ஆகியவைகளை வைத்து பெண்ணின் தகப்பனுருக்குக் கொடுத்து மாலையும் சூட்டி மரியாதை செய்யும்படிச் சொல்லவும்.

4. மணமகளுக்குப் பரிசு

பின்பு ஆசிரியர், மணமகளுக்கு பிள்ளை வீட்டார் பரிசாக அளிக்கும் ஆடைகளுக்கு மஞ்சள் தடவி, அவற்றையும் ஆபரணங்களையும் ஒருதட்டில் வைத்து, அவைகளோடு பூக்கள், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூக்கள், தேங்காய், பழம் ஆகியவைகளையும் வைத்து, சபையில் உள்ள எல்லோரும் தொட்டு வாழ்த்தும்படிச் சுற்றிக் காட்டிவிட்டு வந்து தன் இடத்தில் அமர்ந்து, அவ்வாபரணங்களின் எடை, மதிப்பு முதலியவைகளைத் தெரிந்து சபையோருக்கு விவரித்துச் சொல்லி, அவற்றையும் ஆடைகளையும், சபையோர் முன் வைத்துள்ள வரிசைகளையும், பிள்ளை வீட்டார் தங்கள் வாக்குறுதிக்கு அடையாளமாக மணமகளுக்குப் பரிசாக வழங்குவதாகச் சொல்லி, ஆடை யாபரணங்கள் வைத்துள்ள தட்டைப் பெண்ணின் தகப்பனாரிடம் கொடுக்கவும். அவர் அதை உடனே மணப் பெண்ணுக்குக் கொடுத்தனுப்ப வேண்டும். முன்பெல்லாம் அவ்வாடை ஆபரணங்களை மணப்பெண் அணிந்துகொண்டு சபையோர் முன் வந்து சேவித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வார்கள். அம்மாதிரி இப்போது நடைபெறுவதில்லை.

5. முகூர்த்தப் பத்திரிகை

ஆசிரியர் கீழ்க்கண்டவாறு இரண்டு நல்ல காகிதத்தில் எழுதி அவ்விரண்டு பத்திரிகைகளிலும் மணமக்களின் தந்தையருடைய கையொப்பங்களைப் பெற்றுத் தானும் அவ்விரண்டிலும் சாட்சி கை யொப்பமிட்டு ஒன்றை பிள்ளையின் தகப்பனாரிடமும் மற்றொன்றை பெண்ணின் தகப்பனாரிடமும் கொடுக்கவும்.

விசு ஆண்டு ஆவணித் திங்கள் 1-ம் நாள் (17-8-1941) ஞாயிற்றுக்கிழமை ஆகிய இந் நன்னாளில், காஞ்சிபுரம் முருகப்ப நாயகரின் மகள் திருவளர் செல்வி தனக்கோட்டி அம்மாளுக்கும், காஞ்சிபுரம் முனிசாமி நாயகருடைய மகன் திரு

வளர் செல்வன் அண்ணுமலைக்கும் விசு ஆண்டு ஆவணித் திங்கள் 29-ம் நாள் (14-9-1941) ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணிக்குமேல் 10 மணிக்குள்ளான நற்பொழுதில் காஞ்சியில் திருமணம் நடத்திக் கொள்வதாக நாங்கள் நிச்சயிக்கிறோம்.

இப்படிக்கு

முனிசாமி நாயகர் முருகப்ப நாயகர்

சாட்சி :—

அ. கு. பாலசுந்தரன்.

6. நலங்கு

பின்னர் வீட்டின் ஒரு பகுதியில், பெண்கள் மணப் பெண்ணுக்கு பரிசாக வழங்கப்பட்ட ஆடையாபரணங்களை அணிவித்து, நலங்கு இடுவார்கள்.

7. விருந்து

அதே சமயத்தில் வீட்டின் மற்றொரு பகுதியில், இச் சடங்கைக் காணவந்தவர்க்கு உபசரிப்பும் விருந்தும் அளிக்கப்படும். அதோடு இச் சடங்கு முடிவுறும்.

கெட்டித் தாம்பூலம்

சில சமயங்களில் எதிர்பாராதமாதிரியில் பிள்ளை வீட்டாருக்குத் தகுந்த இடத்தில் பெண் கிடைத்துவிடும். ஆனால் அச் சமயத்தில் நிச்சயார்த்தம் நடத்திக்கொள்ள வேண்டிய ஆடையாபரணங்களை வாங்குவதற்குப் போதிய வசதிகள் அவர்களுக்கு இராது. ஆகவே தங்களுக்கே அப் பெண்ணைக் கொடுப்பதாக பெண்வீட்டாரிடமிருந்து ஓர் உறுதிமொழி வாங்க ஒரு சிறிய சடங்கை நடத்திக்கொள்வார்கள்.

இச் சடங்கில் மணமக்களின் நெருங்கிய சுற்றத்தார் சிலரே வந்திருப்பார்கள். புரோகிதரும் அழைக்கப்படுவதில்லை. 3 அல்லது 5 தட்டு வரிசைகள் வைக்கப்பட்டிருக்கும். 'என் பெண்ணை உங்கள் பிள்ளைக்கே கொடுக்கிறேன்' என்று பெண்ணின் தகப்பனார் சொல்லி ஒரு தாம்பூலத்தைப் பிள்ளையின் தகப்பனாருக்குக் கொடுப்பார். உடனே 'உங்கள் பெண்ணை நான் என் பிள்ளைக்கே கட்டிக் கொள்கிறேன்' என்று பிள்ளையின் தகப்பனார் உறுதிகூறி ஒரு தாம்பூலத்தை பெண்ணின் தகப்பனாருக்குக் கொடுப்பார். ஆடையாபரணங்களுக்குப் பதிலாக வெற்றிலைப்பாக்கு தேங்காய், மஞ்சள், குங்குமம், பூக்கள் ஆகியவற்றை ஒரு தட்டில்வைத்து பெண்ணுக்குப் பரிசாக அளிப்பார்கள். அதோடு இச் சடங்கு முடிவுறும்.

பின்பு இதை சாட்சிகளாகப் பார்த்துக்கொண்டிருந்த சுற்றத்தாருக்கு ஒரு சிறிய விருந்து அளிக்கப்படும்.

இவ்வாறு நிச்சயம் செய்து கொண்டவர்கள் தான், பின்னால் மணப் பந்தரிலே நிச்சயார்த்தம் செய்து கொள்வார்கள்.

மருவிலக்கம்

திருமணம் நடந்த அன்று பிற்பகலோ மாலையிலோ, அல்லது 2, 3 நாள் கழித்தோ இச் சடங்கை பெண்வீட்டார் தங்கள் இல்லத்தில் நடத்துவார்கள். திருமணத்தை நடத்தி வைப்பவர்கள் பெண்வீட்டாரேயானால், திருமணம் நடந்தவுடன், அன்றே மருவிலக்கத்தையும் நடத்திவிட்டு, வந்தவர்களுக்கு விருந்து நடத்துவார்கள். இது ஒரு சிக்கனமான செயல் ஆகும்.

இச் சடங்கு தொடங்குவதற்கு முன் பெண்வீட்டார் மணமக்களுக்குப் பரிசாக வழங்கும் பொருள்கள் அடங்கிய தட்டுகள், பித்தளை, வெள்ளிப் பாத்திரங்கள், ஆடையாபரணங்களையும், மணமக்களுக்கும், மற்ற உறவினர்களுக்கும் தோழிப் பிள்ளை, தோழிப்பெண்ணுக்கும் அளிக்க இருக்கும் ஆடைகளையும் சபையினர் முன்னால் கொண்டுவந்து வைக்க வேண்டும். ஆசிரியரின் முன்னே ஒரு தட்டில் உதிரிப்பூக்கள், அறைத்தமஞ்சள், குங்குமம் ஆகியவைகளை வைக்கவேண்டும்.

1 இறை வணக்கம்

பக்கம் : 9

2. சோதி வழிபாடு

பெண்ணுக்குத் தகப்பனார் அல்லது பாட்டனாரை கொண்டு இவ் வழிபாட்டை பக்கம் : 37-ல் சொல்லியிருப்பதுபோல் நடத்தவும்.

3. பரிசுகள் வழங்கல்

பின்னர் ஒரு தட்டில் மணப்பெண்ணின் அத்தைமார், மூத்த சகோதரிகள், தோழிப் பிள்ளை, தோழிப் பெண், மண

மகன், மணமகள் ஆகியவர்களுக்கு மேல்சொன்ன வரிசையில் அவரவர்களுக்கென வைக்கப்பட்டுள்ள ஆடைகளைப் பரிசாக வழங்கவேண்டும். ஒவ்வொருவர்க்கும் சேர வேண்டிய ஆடைகளை ஒரு தட்டில் வைத்து, மஞ்சள் தடவி, கூடவே வெற்றிலைப் பாக்கு, மஞ்சள், தேங்காய், பூக்கள் ஆகியவைகளையும் வைத்து, அவர்களுடைய பெயரையும், உறவு முறையையும் எடுத்துச்சொல்லி, அவர்களை அழைத்து அளிக்கவேண்டும்.

4. வாழ்த்து

கடைசியாக மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கினவுடன், அவ்வாடைகளை உடுத்திக்கொண்டு சபையினர் முன்னே வந்து வணங்கும்படி அவர்களுக்குச் சொல்லி அனுப்பிவிட்டு, உடனே சபையில் உள்ள எல்லாருக்கும் வாழ்த்துவதற்காக உதிரிப்பூக்களை ஆசிரியர் வழங்கவேண்டும். மணமக்கள் வணக்கம் செலுத்தலும் சபையோர் வாழ்த்தலும் முடிந்தவுடன், வந்திருப்பவர்களுக்கு உபசரிப்பும் விருந்தும் அளிக்கப்படும்.

அதற்குப் பின்னால், அன்றோ, மறுநாளோ அல்லது 2, 3 நாட்கள் கழித்தோ மணமக்கள் மணமகனின் இல்லத்தைச் சேருவார்கள்.

சீமந்தம்.

இது மணப்பெண் முதன் முதலில் கர்ப்பிணியான 7 அல்லது 9-ம் மாதத்தில் மணமகன் வீட்டில் நடக்கும் ஒரு சடங்கு. மணப் பெண் வீட்டார் பலவித பலகாரங்களையும் ஆடையாபரணங்களையும் மணமகளுக்கு வரிசையாகக் கொடுப்பார்கள். இதற்குப் புரோகிதர் தேவையில்லை; கர்ப்பிணியின் உறவினரான பெண்களே நடத்திவிடுவார்கள். கர்ப்பிணியை அலங்கரித்து கூடத்தில் உட்காரவைத்து நலங்கிட்டு, பாட்டுப்பாடி களிப்பார்கள்.

சில குடும்பங்களில் மணமகனையும் கர்ப்பிணியின் பக்கத்தில் உட்காரவைத்துப், புரோகிதரைக்கொண்டு திருமணம்போல பல சடங்குகளைச் செய்வார்கள். அப்படிச் செய்யும்போது பெண்வீட்டார் மணமகனுக்கும் புத்தாடைகள் வழங்குவார்கள். இவ்வாறு செய்வது சிக்கனத்துக்கு மாறுபட்ட வீணான செயலாகும். சடங்கு முடிந்ததும் மணமகன் வீட்டார் வந்தவர்க்கு விருந்தளிப்பார்கள்.

தொட்டிலில் இடல்

1. புண்ய வாசம்

குழந்தை பிறந்ததைத் தீட்டாகவும், குழந்தையைப் பெற்றவளை தீண்டாதவளாகவும் கருதும் சிலர், குழந்தை பிறந்த 9 அல்லது 11-ம் நாள் காலையில் வீட்டைச் சுத்தம் செய்துவிட்டு, புரோகிதரைக்கொண்டு புண்ய வாசம் செய்வார்கள். ஆசிரியர் ஒரு வாழையிலையின் மேல் ஒரு தொன்னையைவைத்து அதில் கோமூத்திரம், சாணம், நெய், பால், தயிர் ஆகியவைகளைச் (ஆவினில் ஐந்து) சிறிது சிறிதாக இட்டு, அவற்றோடு ஒரு வாழைப்பழத்தையும் சேர்த்துப் பிசைந்து வைப்பார். அதற்கு அப்பால் ஒரு வாழைப்பூ செம்பில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி 4, 5 மாவிலைகளை அதன் வாயில் செருகி, அவைகளினிடையே ஒரு நாருரித்த தேங்காயை வைத்து, அதற்கு மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டு, மாலைசூட்ட வேண்டும். அக் கலசத்தின் எதிரில் வெற்றிலைபாக்கு, பழம் முதலியவைகளை வைக்கவும்.

அதற்குப் பின்னே குத்துவிளக்கு ஒன்றை ஏற்றி வைக்கவேண்டும். ஆசிரியர் முதலில், பக்கம் 9-ல் கண்ட படி இறைவணக்கமும், குழந்தையின் தந்தையைக்கொண்டு பக்கம் 37ல் கண்டபடி சோதி வழிபாடும் நடத்திப், பின் ஆவினில் ஐந்துக்கும் பூசை நடத்தி, வீட்டில் உள்ளவர்களுக் கெல்லாம் அதைச் சிறிது சிறிதாகக் கொடுத்து, சாப்பிடும் படிச் சொல்லவும். அதனால் அவர்களுடைய உடல்கள் பரிசுத்தமாய் விட்டதாகக் கருதப்படும்.

பின் ஆசிரியர் எழுந்து கலசச் செம்பைக் கையில் எடுத்துக்கொண்டு அதில் உள்ள புண்ணிய தீர்த்தத்தை மாவிலையால் தோய்த்து எடுத்து, வீட்டில் உள்ள எல்லா

அறைகளின் சுவர்களின்மேலும் தெளிக்க வேண்டும். அதனால் அவ்வறைகள் எல்லாம் பரிசுத்தமடையும்.

அப்போது அவ்வீட்டில் உள்ளவர்கள் தீட்டுப் போய், பரிசுத்தமான உடல்களோடு புண்ணியமான இடத்தில் வாசம் செய்வதாகக் கருதப்படுவர்.

2. தொட்டில்

மாலைவேளையில் உறவினரும் நண்பர்களும் வந்து கூடியபின், கூடத்தில் ஒரு தொட்டிலைமாட்டி அதைச் சுற்றி ஜமக்காளங்களை விரித்துப் போட்டு அவற்றின்மேல் தாய்மார்கள் உட்காருவார்கள். குழந்தையை அலங்கரித்துத் தொட்டிலில் இட்டு தாலாட்டுப் பாடல்களையும் நலங்கு பாடல்களையும் பாடித் தாய்மார்கள் களிப்பார்கள். குழந்தைக்கும் தாய்க்கும் சுற்றத்தார் பலர் குழந்தைக்கு வேண்டிய உடைகள், பவுடர், சோப்பு, சோப்பெட்டி, மைப்பாணை, சர்க்கரை, ரொட்டி, பழம், மிட்டாய் முதலியவைகளைப் பரிசாக வழங்குவார்கள். பின் விருந்து நடைபெறும்.

இச் சடங்குகளில், காலையில் புண்யவாசம் செய்வது வீணான செயல் ஆகும்.

காது குத்தல்

இதைத் 'தோடணி சிறப்பு' 'காதணிவிழா' 'கர்ண பூஷணம்' என்றெல்லாம் சொல்வார்கள். இச் சடங்கு தொடங்குவதற்கு முன்பே காது குத்திக்கொள்ளவேண்டிய பிள்ளைகள் மொட்டையடித்துக்கொண்டு, குளித்து நல்ல உடைகளை அணிந்திருப்பார்கள். காது வளையங்களைச் செய்த தட்டாரும் காது குத்துவதற்காக வந்திருக்க வேண்டும். பிள்ளைகளை வரிசையாகத் தங்கள் அம்மான் மார்களின் மடிகளில் கிழக்குநோக்கி உட்கார வைக்க வேண்டும். ஒரு தட்டில் அறைத்த மஞ்சள், குங்குமம், உதிரிப் பூக்கள் ஆகியவைகளை வைத்து, ஆசிரியரின் முன் வைக்கவேண்டும். குத்துவிளக்கு ஒன்றும் ஏற்றிவைக்கப் பட்டு, அதன் முன்னே மற்றொரு தட்டில் வெற்றிலைப் பாக்கு, காது வளையங்கள், பூக்கள் வைக்கப்பட வேண்டும்.

1. இறை வணக்கம்

பக்கம் : 9

2. சோதி வழிபாடு

இது பிள்ளைகளின் அம்மான்மார்களைக் கொண்டு பக்கம் 37-ல் சொல்லியபடி செய்யப்படவேண்டும்.

3. காது குத்தல்

ஆசிரியர் காது குத்தும் வளையங்களை அம்மான் மார்களின் கையில் கொடுக்க, அவர்கள் பிள்ளைகளை ஒரு மறைவிடத்துக்கு அழைத்துக்கொண்டு போய், அவர்கள் கையில் மிட்டாய், பழம் முதலியவைகளைக் கொடுத்து, தட்டானைக் கொண்டு காதுகளைக் குத்தி வளையங்களை மாட்டிவிட வேண்டும். பின் அம்மான்மார்கள் அப்பிள்ளைகளின் அழுத கண்களைத் துடைத்துத் தேற்றி, அழைத்து வந்து மீண்டும் பழையபடி ஆசிரியரின் முன் உட்கார வைக்கவேண்டும்.

4. பரிசுகள் வழங்கல்

முதலில் அம்மான்மார்கள் பிள்ளைகளுக்கு உடைகளைப் பரிசுகளாக வழங்குவார்கள். அவைகளை ஆசிரியர் வாங்கி அவர்களது பெயர்களைச் சொல்லி வழங்கவேண்டும். உடனே பிள்ளைகளுக்கு அவ்வுடைகளை அணிந்து மீண்டும் அழைத்து வரும்படி ஆசிரியர் சொல்லியனுப்பவேண்டும். பிள்ளைகள் அவ்வுடைகளை அணிந்து கொண்டு வந்து அமர்ந்ததும், மற்ற உறவினரும் நண்பர்களும் அளிக்கும் பரிசுகளை வாங்கி அவர்களுடைய பெயர்களைச் சொல்லி வழங்க வேண்டும்.

5. கண்ணேறு கழித்தல்

பின் ஆலம் கொண்டுவரச்சொல்லி, பிள்ளைகளுக்குக் கண்ணேறு கழித்து எழுப்பி அனுப்பி விடவேண்டும். உபசரிப்பு, விருந்தோடு இச்சடங்கு முடிவுறும்.

பள்ளிக்கு அனுப்புதல்

இதிலும் புரோகிதர் அவசியமில்லை. பிள்ளைக்கு 5 வயதானவுடன் ஒரு நல்ல நாள் பார்த்துத் தங்கள் குல தெய்வத்துக்குப் பலகாரங்கள், பழங்கள், மிட்டாய்கள் ஆகியவற்றைக் கொண்டு படையல் போட்டுப் பூசனை செய்து விட்டு, பள்ளி உபாத்தியாயரைக் கொண்டு முதல் எழுத்துக்கள் சிலவற்றை எழுதப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்கச் சொல்லவேண்டும். பின் உபாத்தியாயருக்கும், அவருடன் வந்த பிள்ளைகளுக்கும், வந்திருக்கும் சுற்றத்தினருக்கும் நட்பினருக்கும் பலகாரங்களும் பழங்களும் வழங்க வேண்டும்.

அதைவிட்டுப் புரோகிதரைக் கொண்டு சோதிவழிபாடு, கலசவழிபாடு முதலியவைகளை நடத்துவது அனுவசியமான செயல்கள் ஆகும்.

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14